விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 225 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 16 திங்கட்கிழமை (01.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## 22ஆவது திருத்தம் இவ்வாரம் அமைச்சரவைக்கு

(கொழும்பு)
அரசியலமைப் 11

பரபரப்பாகும் தென்னிலங்கை அரசியல்

## நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டனுக்கு மீண்டும் முக்கிய அமைச்சுப் பதவிகள்?



(கொழும்பு)
எதிர்வரும் அமைச்சரவை மாற்றத்தில் பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித் துவப்படுத்தும் மேலும் பல மூத்தவர்களுக்கு அமைச்சரவை அமைச்சர் பதவிகள் வழங் கப்பட உள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது. 02



## இன்று முதல் பாடசாலை பேருந்து சேவை

(கொழும்பு)
எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் புதிதாக பாடசாலை பேருந்து சேவையை ஆரம்பிக்க தேசிய 11

# சீனா தலையிட்டால் நிலைமை மோசமாகும்

## கப்பல் விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)
இந்து சமுத்திரத்தில் சீனாவின் இராணுவ பிரசன்னம் இந்தியா நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்று தாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்தி ருப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சீன இராணுவ பிரசன்னத்துக்கு இடமளித்து நிலைவரத்தை இலங்கை பாரதூரமானதாக்கக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில்

## போசனை உணவின்றி 6.3 மில்லியன் மக்கள்

உலக உணவுத் திட்டம்

(கொழும்பு)
இலங்கையில், 6.3 மில்லியன் மக்கள் உண வுப் பாதுகாப்பின்றி இருப்பதாகவும் நெருக் கடி வெளிவரும்போது இது மோசமடையக்கூடும் என்றும், உலக உணவுத் திட்டம் அமைப்பு கூறி யுள்ளது.
6.7 மில்.மக் கள் போசனை 11

## எதிர்வரும் தினங்கள் கடும் மழை பொழியும்



(கொழும்பு)
இன்று முதல் எதிர்வரும் தினங்களில் மழை அதிகரிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளிலும் நாட்டின் தென்மேற்கு கடற்பகுதியிலும் மழை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின் றது. 11

## ஓய்வுபெறும் வயது 60 இடைக்கால பட்ஜெட்டில் வருகிறது

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)
அரச ஊழியர்களின் ஓய் வூதிய வயதை 60 ஆகக் குறைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரி வித்துள்ளார்.
கடந்த அரசாங்கம் ஓய் வூதிய வயதை 65 ஆக அதி கரித்திருந்தது.
ஒகஸ்ட் இல் சமர்ப்பிக்கப் படவுள்ள இடைக்கால வரவு செலவுத் திட்டத்தால் ஓய்வு பெறும் வயதை 60 ஆக மீளவும் இத் 11

மக்கள் அவதானம்

## புதிய டெங்கு இனம் நாட்டில் அடையாளம்

(கொழும்பு)
நாட்டில்புதிய டெங்கு இனம் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.
காய்ச்சல் தொடர்ந்தால் மருத்துவ ஆலோசனை யைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், கொழும்பு றிஜ்வே வைத்தியசாலை 11

## இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

வவுனியாவில் கொடூரம்



(குருமன்காடு)
வவுனியா, ஆச்சிபுரம் பகுதி யில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கட்டுத்துவக்கால் 11

## விபரீத முடிவெடுத்த முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மல்லாகத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் முதிய வரின் சடலம் மீட்கப் 11

## சீன கப்பலின் வருகையை உறுதி செய்தது இலங்கை

கடும் கண்காணிப்பில் இந்தியக் கடற்படை

(கொழும்பு)
இலங்கையை நோக்கி பய ணித்துக் கொண்டிருக்கும் சீன கப்பலின் நடமாட்டத்தை அவதானித்து கொண்டிருப்ப தாக இந்திய பாதுகாப்பு வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.
சீன கப்பல் ஒகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் அம் பாந்தோட்டை துறை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சாதகமாக்கும் அமெ., இந்தியா, சீனா

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண



(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதா நெருக்கடியினை இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகள் தங்களின் அதிகாரப் போட்டிக்காக பயன்படுத்திக் கொள்வதை நன்கு விளங்கிக்கொள்ள முடிகிறது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஸ்தாபிகப்படும் சர்வக் கட்சி அரசாங்கத்தின் வியூகம் தொடர்பில் வெளிப் படைத்தன்மையிலான பேச்சுவார்த்தையினை முன்னெடுப்பது அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளாமை கவனிக்கத்தக்கது.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்கள் மேலும் மிக மோசமான நிலைக்கு கொண்டு செல்லும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள பின்னணியில் அமெரிக்கா குறிப்பிட்டதை போன்று இலங்கைக்கு உதவி புரியவில்லை.

ஒத்துழைப்பிற்கான நிபந்தனைகளை மாத்திரம் தொடர்ந்து விதித்து வருவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுவார் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் என்றார். (4-7)

## நாமல் ராஜபக்ஷ...

அதற்கமைய, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம். சந்திரசேன, எஸ்.பி. திஸாநாயக்க, சி.பி. ரத்நாயக்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரான வஜிர அபேவர்தனவுக்கு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாக தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி மக்களால் விரட்டப்பட்ட ராஜபக்ஷக்கள் மற்றும் விசுவாசிகளுக்கு மீண்டும் அமைச்சு பதவிகளை கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் காரணமாக கொழும்பு அரசியல் பரபரப்பாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)


**விற்பனைக்கு**

SCOOTER (ஸ்கூட்டர்) விற்பனைக்கு
BAJAJ CLASSIC SELECT
125 C C Self Start தனியாள் பாவனை
(C-4686)

**077 536 2809**





ஓம் சக்தி
ஒரே தாய் ஒரே குலம்

**மேல்வருவத்தூர்**
**ஆதிபராசக்தி ஆலயம்**
**வழிபாட்டு மன்றம் – கிளானை அல்வாய்**
**ஆடிப் பூரத் திருவிழா 01.08.2022**

காலை 6.10 மணி பக்தர்கள் அன்னைக்கு பாலாபிஷேகம்
பகல் 12.00 மணி கஞ்சி படைப்பு, தொடர் பூசை, அன்னதானம்

அனைவரும் வருக அன்னையின் அருள் பெறுக.

விழா அனுசரணை
சக்தி கந்தசாமி குடும்பம்
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
(C-4685)

இங்ஙனம்
ஆலய நிர்வாகம்



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**076 097 3127**


# மரண அறிவித்தல்



## திரு. சின்னக்குட்டி ஆறுமுகம்

மத்துவிலைப் பிறப்பிடமாகவும் வரணி இயற்றாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி ஆறுமுகம் அவர்கள் கடந்த 29.07.2022 (வெள்ளிக்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் வரதலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் ஜீவாகரன் (நோர்வே), ஊர்மிளா (பிரான்ஸ்), பிரியங்கன் (கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - முழங்காவில் & பரந்தன் ), கிருசாந்தன் (Supervisor, Silver Mill Group) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதா, நிர்மலராஜன், சாம்பவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆருஷன், அக்ஷயன், அருனிகா, அஷ்னிகன், அகிஷன், அகனியா, அஷ்னிகா, அக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.08.2022) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.30 மணியளவில் இயற்றாலை ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-4684)

தகவல்: குடும்பத்தினர்
வரணி, இயற்றாலை, வரணி.
077 711 1306
077 959 7999

# 15 ஆண்டுகள் உன் நினைவுகளுடன்




## சகாதேவன் நிலக்ஷன் 1985 - 2007

டடா அண்ணா அண்ணி நிலாஷன்

(12301)

செல்வநிலாவகம்
250,(47) புகையிரத நிலைய வீதி கொக்குவில்

2022.08.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம்,அமைதி
# சகல மக்களுக்காகவும் பாதுகாக்கப்படுகின்றன
### பிரதமர் தினேஸ் குணவர்தன

(கொழும்பு)
சட்டம் மற்றும் அமைதி என்பன சகல மக்களுக்காகவே பாதுகாக்கப்படுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர் யுவதிகளின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு தயார் எனவும் அதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச கட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அவசரகால சட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினர் வெவ்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

எனினும் அவர்களுடன் சிறந்த நட்புணர்வுடன் அரசாங்கம் செயற்படுகிறது.

எனவே, இந்த நிலை தொடர்ந்து செல்லாது என நம்பப்படுவதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். (4)

# ஓகஸ்ட் 9 இல் மீண்டும் கலவரம்?
### ஜனாதிபதியை சந்திக்கவுள்ள மகிந்த,பசில்

(கொழும்பு)

**எதிர்வரும் ஓகஸ்ட் 9 ஆம் திகதி கலவரம் வெடிக்கலாம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சந்தேகிப்பதாகவும் இதனால், அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அந்த கட்சி ஈடுபட்டுவருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**



நாட்டில் மீண்டும் கலவரமான சூழ்நிலை ஒன்று எதிர்வரும் 9 ஓகஸ்ட் மாதம் நடைபெறாது இருக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த பிரதிநிதிகள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகி வருவதாக தெரியவருகிறது.

அடுத்த வாரம் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக திகதியையும் நேரத்தையும் ஒதுக்கித்தருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ மற்றும் அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள உள்ளனர்.

நாட்டில் மீண்டும் போராட்டமான நிலைமை ஏற்படும் என சமூக ஊடகங்களில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு



வருவதாகவும் ஏதேனும் ஒரு வகையில் அப்படியான நிலைமை ஏற்பட்டால், தற்போது அமைதியாக காணப்படும் நாட்டில் மீண்டும் ஸ்திரமற்ற நிலைமையேற்படும் எனவும் பொதுஜன பெரமுன கருதுகிறது.

இதனால், அதனை தடுப்பதற்காக ஜனாதிபதியுடன் இந்த பேச்சுவார்த்தையை கோரியுள்ளதாக கூறப்படுகிறது. (4)

# தலதாமாளிகைக்கு பிரதமர் விஜயம்

(கொழும்பு)
பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டி புனித தலதாமாளிகைக்குச் சென்று வழிபட்டுள்ளார்.

தலதாமாளிகைக்கு சென்றிருந்த பிரதமரை வரவேற்க பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் எனப் பலரும் தலதா மாளிகையில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேவேளை பிரதமராக பதவியேற்ற பிறகு தலதா மாளிகைக்கு பிரதமர் செல்வது இதுவே முதல் முறையாகும். (4)

# நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் செப்டெம்பருக்கு பின் தள்ளப்பட்டுள்ளது
### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம், கடந்த வாரங்களாக ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக செப்டெம்பர் மாதத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அந்தச் சம்பவங்களுக்குப் பிறகு நிதியுதவி குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்கள் நகரவில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் ஒரு உடன்படிக்கையை எட்ட இலக்கு வைத்திருந்தாலும், தற்போது அது ஒரு மாதம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடுமையான வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு காரணமாக வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்துவதாக இலங்கை கடந்த ஏப்ரல்மாதம் அறிவித்தது.

இலங்கை 51 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனை செலுத்த வேண்டும், இதில் 28 பில்லியன் டொலர்கள் 2027க்குள் செலுத்தப்பட வேண்டும்.

நாணய நெருக்கடி காரணமாக எரிபொருள், மருந்து மற்றும் சமையல் எரிவாயு போன்ற பல முக்கியமான இறக்குமதி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)

# துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
ரத்கம - கம்மெத்தேகொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் வேளையில் இந்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் 48 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து ரத்கம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

# எரிபொருள் நிலையங்களில் முகக்கவசம் அவசியம்

(கொழும்பு)
முகக்கவசம் அணியாமல் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வருகை தருபவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது என எரிபொருள் விநியோகிப்பவர்களின் சங்கத்தின் இணைசெயலாளர் நாவொட்டுன்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த நடைமுறை இன்று திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரவுள்ளதோடு, வரிசைகளில் காத்திருக்கும் அனைவரும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# இன்னொரு கொவிட் அலையை எதிர்கொள்ளும் நிலையில் நாடு இல்லை
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
இன்னுமொரு கொவிட் அலையை தடுப்பதற்கு ஆகக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முதலாம் இரண்டாம் கொவிட் அலையை எதிர்கொண்டது போல இன்னொரு அலையை எதிர்கொள்வதற்கான பலம் எம்மிடம் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஹரித அளுத்கே இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும்காலத்தில்நாட்டை முடக்குவது சாத்திய மில்லை.

ஆகவே புதிய அலை உருவாவதை தடுப்பதற்கு பொறுப்புள்ள அதிகாரிகள் பலனளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022
## 17ஆவது தகுதிகாண் போட்டியில்
# ஓல்ட்கோல்ஸ் அணி வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட மேற்படி தொடரின் 17 ஆவது தகுதிகாண் போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி யாழ். பல்கலைக்கழக அணியை 79 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப் பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

நிரோஸன்-59 மாதவரூபன் -20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பல்கலைக்கழக அணியைச் சார்ந்த வதுஸன் 7 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 22 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஓல்ட்கோல்ஸ் அணியைச் சார்ந்த திலீபன் 3 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரியலக்ஷன் 5 ஓவர்களில் 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் ஜின்துஸன் 6 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கு (RATING) ஓல்ட்கோல்ஸ் அணி 8.27 புள்ளிகளையும் யாழ்.பல்கலைக் கழக அணி 1.69 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4-6)

# சாதனை நிகழ்த்திய நியூஸிலாந்து கப்டன்




நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் கப்டன் சோஃபி டிவைன்,இருபது-20 போட்டிகளில் 2000 ஓட்டங்களுடன் 100 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார்.

நியூஸிலாந்து-தென் ஆபிரிக்க மகளிர் அணிகளுக்கு இடையிலான கொமன்வெல்த் இருபது-20 போட்டி பெர்மிங்காமில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நியூஸிலாந்து அணி 167 ஓட்டங்கள் எடுத்த நிலையில், தென் ஆபிரிக்க அணி 154 ஓட்டங்களே எடுத்ததால் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து அணியின் கப்டன் சோஃபி டிவைன் இந்தப் போட்டியில் 48 ஓட்டங்கள் விளாசினார். அத்துடன் பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட அவர், 4 ஓவர்கள் வீசி 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இந்த நிலையில் புதிய உலக சாதனை ஒன்றை அவர் படைத்துள்ளார்.

மகளிர் இருபது-20 கிரிக்கெட்டில் 2000 ஓட்டங்கள் மற்றும் 100 விக்கெட்டுகள் எடுத்த முதல் வீராங்கனை சோஃபி டிவைன் ஆவார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2677


**மயூரன்**




**சுஜிதா**




**ரமனா**




**துஷியந்தி**




**சந்தோஷ்**




**கவித்திரா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.கட்சியில் இணைய தயாராகும் மொட்டுக்கட்சியினர்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்துள்ள அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைய தயாராகி வருவதாக அரசியல் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் இருந்து அரசாங்கத்தில் இணைந்துக்கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாது, அண்மைய காலத்தில் அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்பட்டு வரும் சிலரும் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய தயாராகி வருவதாக தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் தற்போது அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சிலரும் அடங்குகின்றனர்.

இதனடிப்படையில், அடுத்து நடைபெறும் தேர்தலில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிடுவார்கள்என தெரியவருகிறது. (4)



மன்னார் டிலாசால் கிட் கெம்பஸ் பாடசாலையின் 2022 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வானது பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ஜோஹன் தலைமையில் கிட் கெம்பஸ் மைதானத்தில் இடம் பெற்றது. (படம்: ஜோசப்நயன்)

# யாழில் தேவாலயமொன்றில் மின்னல் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள தேவாலயமொன்றில் மின்னல் தாக்கியுள்ளது.

குருநகர் புனித ஆரோக்கியநாதர் தேவாலயத்தில் நேற்று காலை ஆராதனை இடம்பெற்றபோதே குறித்த சம்பவம் நடந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்று காலை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இடி மின்னலுடன் மழை வீழ்ச்சி பதிவான நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

தேவாலயத்தில் நடந்த மின்னல் தாக்கத்தால் மேற்கூரைப் பகுதிகளும், மின் இணைப்புக்களும் சிறிது சேதமடைந்தன. எனினும், யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (6-33)

# மீனவர் வலையில் சிக்கிய அரிய வகை இறால்



(மன்னார்)

பாம்பன் பகுதியை சேர்ந்த மீனவரின் வலையில் அரிய வகை இறால் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் பாம்பன் மீன் பிடி துறைமுகத்திலிருந்து 100 இற்கு மேற்பட்ட விசைப் படகுகளில் நேற்று முன் தினம் மீன்பிடிக்க மீனவர்கள் கடலுக்கு சென்றனர்.

இந்த நிலையில் மீனவர்கள் மீன்களைப் பிடித்துக் கொண்டு கரை திரும்பிய வேளை பாம்பன் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவரின் வலையில் அரியவகை இறால் இனங்களை சேர்ந்த மணி சிங்கி இறால் சிக்கி உள்ளது.

அதனுடைய எடை சுமார் 2.5 கிலோ என தெரியவந்துள்ளது. இந்த அரியவகை இறால் மருத்துவ குணம் உள்ளதால் வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (4-6-285)

# சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரவணை-தேவபுரம் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் இடம் பெறும்.

இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் வியாழக்கிழமை காலை 10.35 மணிக்கு தீர்த்த திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4-6)

# பட்டப்பகலில் வீடு புகுந்து சைக்கிள், தண்ணீர்பம்பி திருட்டு

(தரும்புரம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் சைக்கிள், தண்ணீர்ப்பம்பி என்பன களவாடப்பட்டுள்ளன. நேற்று முன் தினம் வீட்டு உரிமையாளர்கள் எரிபொருள் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையம் சென்றுள்ளனர்.

அந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி வீட்டில் இருந்த தண்ணீர் பம்பி, துவிச்சக்கர வண்டி, ஒரு சிறிய தொகை பணம் என்பன பட்டப்பகலில் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததையடுத்து சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 220 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 | 600 |
| தக்காளி | 380 | 380 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 280 | 240 |
| கோவா | 350 | 320 | 320 | 360 |
| கரட் | 300 | 330 | 350 | 400 |
| பூசணி | 160 | 150 | 150 | 150 |
| புடோல் | 160 | 120 | 140 | 200 |
| வாழைக்காய் | 160 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 280 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 250 | 300 | 180 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 250 |
| பீற்றூட் | 150 | 240 | 200 | 250 |
| கறிமிளகாய் | 600 | 800 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | — | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 200 | 400 |
| முள்ளங்கி | 120 | 100 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 140 | 150 | 120 | 140 |

# ஏழாலை சூராவத்தை முத்துமாரி அம்பாள் மஹோற்சவம்

(குப்பிழான்)

ஏழாலை தெற்கு சூராவத்தை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 11 தினங்கள் இவ்வாலய மஹோற்சவம் இடம் பெற உள்ளதுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்த உற்சவமும், அன்றையதினம் மாலை 5.30 மணிக்குத் திருவூஞ்சலைத் தொடர்ந்து கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)

# ஆடிப்பூர விழா

(இருபாலை)

இருபாலை தெற்கு கட்டைப்பிராய் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய ஆடிப்பூர விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனை இடம் பெற்று அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் மதியம் மஹேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. (4-6-136)

(இருபாலை)

திருநெல்வேலி அருள்மிகு நிலாட்ஷிவதாய் ஹயரோகனகயரூபன சுவாமி தேவஸ்தான மஹோற்சவத்தில் இன்று திங்கட்கிழமை காலை ஆடிப்பூர தீர்த்தோற்சவம் இடம்பெற்று அம்பாள் வீதியுலா காட்சி இடம் பெறும். (4-6-136)

(இருபாலை)

யாழ். கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஆடிப்பூர தினத்தில் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (4-6-136)

# பலகுற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பொழுது நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பிச் சென்று குளத்தின் அருகில் மறைந்து இருந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது நீதிவான் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (4-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திகை சந்தைப் பகுதியில் தேங்கியுள்ள கழிவுவாய்க்கால் குப்பைகளை அகற்றவும்

## அப்பகுதி மக்கள் கோரிக்கை



(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட மந்திகை சந்தைக்கு அருகாமையில் உள்ள வாய்க்கால் கழிவுக் குப்பைகளை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த சந்தைக்கு அருகில் உள்ள வாய்க்காலில் குப்பைகள் நிரம்பி இருப்பதால் மழை நீர் ஓட முடியாமல் தேங்கிய நிலையில் உள்ளது.

இதனால் துர்நாற்றம் மற்றும் தொற்றுநோய்கள் பரவக்கூடிய ஆபத்துக்கள் உள்ளன.

சந்தைக்கு வரும் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர்.

குறித்த கழிவு வாய்க்கால் குப்பைகளை அகற்றுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-60)

# நோயாளியை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் சிங்கள மொழி பேசும் பெண் ஒருவர் சுயநினைவு இழந்த நிலையில் கடந்த 25 ஆம் திகதி யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் ஓரிரு வார்த்தைகளை மட்டுமே பேசுகின்றார்.

வவுனியா எனும் வார்த்தையையும் உச்சரிக்கின்றார். அவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளரை தொடர்பு கொள்ளுமாறு பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா அறிவித்துள்ளார். (4-6)

# ஹெரோயினுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

கொடிகாமம் நகர்ப்பகுதியில் உள்ள பாழடைந்த கட்டடம் ஒன்றில் இருந்து கடந்த புதன் கிழமை ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதான இருவரையும் 14 தினங்கள் விளக்கமறியலில் வைத்திருக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கச்சாய் வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 31 மற்றும் 24வயதான சகோதரர்கள் இருவரே இவ்வாறு 210 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவப்புலவர் பொன்.சுகந்தனால் எழுதப்பட்ட சிவபுராண ஆய்வு எனும் நூல் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கரணவாய் சிவன் கோவில் மண்டபத்தில் கரவெட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

# இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலக்கம்-280 பலாலி வீதி கந்தர்மடம் எனும் முகவரியில்இயங்கி வந்தவடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களம் இன்று திங்கட்கிழமை முதல் வடமாகாண சபை வளாகம், கைதடி எனும் முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது என வடமா காண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் இ. சசீலன் அறிவித்துள்ளார். (4-6)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு ள்ளனர்.

கெற்பேலிப் பகுதியில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட சமயம் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது மணல் அகழ்விற்கு பயன்படுத்திய உழவியந்திரத்தைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்து கொடிகாமப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (4-6-30)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கரவெட்டி பிரிவின் அனுசரணையுடன் பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கி மருத்துவ அதிகாரி தலைமையில் நேற்று கரணவாய் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம் - மகாலிங்கம், ரவிசாந்)

# புத்தூர் சந்தியில் ஹயஸ் மோதியதில் ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் சந்தியை அண்மித்த பகுதியான ஏ9 வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

துவிக்கரவண்டியில் பயணித்த எழுதுமட்டுவாழ் வடக்கு பகுதியைச் சேர்ந்த 53 வயதான நபரை ஹயஸ் வான் ஒன்று மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(4-6-30)



யாழ்.இருபாலையூர் த்வ.தஜேந்திரனால் நல்லூரான் மீது பாடப்பட்ட திருநல்லூர்த் திருப்புகழ் வெளியீட்டு நிகழ்வும் இசை அர்ப்பணமும் நிகழ்வு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்- ரவிசாந். சிவசாந்தன்)

# இராசிபலன்

01.08.2022
ஆடி 16, திங்கட்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 03.40 மணிவரை

பூரம் பிற்பகல் 03.41 மணிவரை
சுபநேரம்- 12.03 -01.33 மணிவரை
இராகுகாலம் -07.33-09.03 மணிவரை
ஆடிப்பூரம், நாகசதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்- திருவோணம், அவிட்டம்

**வளவன்**



மேஷம்

பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாடு திருப்தி தரும் வகையில் அமையும்.



ரிஷபம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வழிபாடு காரிய வெற்றி தரும்.



மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதா நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



கடகம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், வார்த்தைகளில் நிதானம் தேவை, தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.



சிம்மம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும்.



கன்னி

வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.



துலாம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் முன்னேற்றமாக அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



விருச்சிகம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் ஆர்வம் கூடும், தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும், பிறர் உதவியுண்டு.



தனுசு

உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், தொழில் சம்மந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.



மகரம்

பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல்நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.



கும்பம்

சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்து கொள்வீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரியும் நாள்.



மீனம்

உடல்நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் விலகும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

உன் கவலைகளையெல்லாம் தாங்கும் சுமைதாங்கி தான் கடவுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி ஆட்சியமைப்பதற்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம்

## கெமுனு விஜேரத்ன

(கொழும்பு)

நாட்டில் தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வாக சர்வகட்சி ஆட்சியமைப்பதே சிறந்த வழி எனும் சூழ்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட ஐவரை தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு நியமிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன உள்ளிட்ட குழுவினர் இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

நாட்டை மீட்டெடுக்கும் முயற்சியில் பங்கேற்கும் இளைஞர்கள் தங்களது புதிய யோசனைகளுடன் பாராளுமன்றத்தில் பிரவேசிக்க வேண்டும் என்பதோடு அதிக வயதான அமைச்சர்களை பாராளுமன்ற ஆசனங்களில் இருந்து நீக்குமாறும் அவர்களுக்கு பதிலாக மேற்படி நபர்களை நியமிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் விகிதாசார வாக்களிப்பு முறையின் கீழ், அதே பழைய போத்தலை கழுவிய பின் புதிய மதுவை நிரப்ப அரசாங்கம் முயற்சிக்கின்றதோடு அதிக வயதான அமைச்சர்கள் நாட்டின் எதிர்கால பயணத்தில் நாட்டின் நன்மைக்காக பங்களிக்க வேண்டும் எனவும் அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன உள்ளிட்ட குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4)

# ஜனாதிபதி இல்லத்திற்குள் நுழைந்த மேலும் ஐந்து பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் இல்லத்திற்குள் நுழைந்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா, களுகெலே - பொனஸ்டா பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை நிறைவேற்றுவதற்காக சந்தேகநபர்களில் ஒருவரின் வீட்டிற்கு பொலிஸார் சென்றபோது குறித்த வீட்டில் மேலும் நான்கு இளைஞர்கள் தங்கியிருந்ததுடன் அவர்களுக்கும் இது தொடர்பான குற்றச்சாட்டுடன் தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், ஜனாதிபதியின் இல்லத்துக்குள் நுழைந்து சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு வரும் நிலையில் தாங்களும் தமது நண்பரின் வீட்டிற்கு தலைமறைவாக வந்ததாக தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நுவரெலியாவைச் சேர்ந்த நபரின் வீட்டில் பதுங்கியிருந்தவர்களில் பிங்கிரிய, கொதட்டுவ, களுத்துறை மற்றும் நுவரெலியா பிரதேசங்களைச் சேர்ந்த ஒரு குழுவினரும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# எரிபொருள் சோதனை; 1,086 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட 1,164 எரிபொருள் சோதனை சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, 1,086 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

மேலும், குறித்த எரிபொருள் சோதனை நடவடிக்கையில், 37,296 லீற்றர் பெற்றோல், 119,457 லீற்றர் டீசல் மற்றும் 19,214 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சிலர் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமான முறையில் எரிபொருளைப் பதுக்கிவைத்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீதான சோதனைகள் தொடரும், என்றும் இதுபோன்ற அனைத்து சம்பவங்கள் குறித்து பொலிஸார் விழிப்புடன் செயற்படுமென அவர் மேலும் கூறினார். (4)

# யுத்தம் நிறைவடைந்த பின்னும் பொருளாதாரம் வளர்ச்சியடையவில்லை

## மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது அவ்வாறு நடைபெறவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலை வெளியிட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச தலைமைத்துவ மாநாட்டில் உரையாற்றிய அவர், நாடு தற்போது கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர் நோக்கி வரும் கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச ஒத்துழைப்பும் சகோதரத்துவமும் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மோசடி, ஊழல் குறைக்காமல் சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி விடயங்களை நிலை நாட்டாமல் நெருக்கடியை நோக்கிச் சென்ற நாட்டிற்கு இலங்கையே உதாரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (4)

# மின்னஞ்சல் மூலம் மின்சாரக் கட்டணம்

(கொழும்பு)

நாட்டில் மின் பாவனையாளர்கள் தங்களின் மாதாந்த மின் கட்டணத்தை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதற்காக தமது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவு செய்யுமாறும் மின்சார சபை நுகர்வோரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் குறித்த மின்பட்டியலை பெறும் சேவைக்காக தமது வாடிக்கையாளர்களை குறுஞ்செய்தி ஊடாகவும் பதிவு செய்வதற்கு இலங்கை மின்சார சபை ஏற்பாடு செய்வதாக தெரிவிக்கிறது.

அதன்படி, இலங்கை மின்சார சபை தனது வாடிக்கையாளர்களை "EBILL" <இடைவெளி> கணக்கு இலக்கம் <இடைவெளி> மின்னஞ்சல் முகவரியை உள்ளீடு செய்து, 1989 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பி பதிவுசெய்து கொள்ளுமாறு கோரியுள்ளது. (4)

# மற்றுமொரு எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

மற்றுமொரு எரிவாயு கப்பல் நேற்று இரவு நாட்டை வந்தடைந்துள்ளதாக எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது பல்வேறு பகுதிகளில் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கான வரிசை முறை முடிவுக்கு வந்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியான எரிவாயு விநியோகத்திற்காக ஒரு இலட்சம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு வெளியிடப்படும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# கோழைத்தனமான நடவடிக்கைகளை ஜனாதிபதி கைவிட வேண்டும்

(கொழும்பு)



"அமைதியான போராட்டக்காரர்களை அடக்கி வேட்டையாடும் கோழைத்தனமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக நிறுத்த வேண்டும்." என ஜே.வி.பி.யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

கைது நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

போராட்டக்காரர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தால் ஒகஸ்ட் 9 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகும் நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (4)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் எரிபொருள் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் எரிபொருள் கொடுப்பனவு இரண்டு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தூர பிரதேசங்களிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எரிபொருள் கொடுப்பனவுக்காக சம்பளத்துடன் கிட்டத்தட்ட ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை ஏனைய பிரதேசங்களிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவாக ஒரு இலட்சத்துக்கு மேல் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் பிரச்சனையால் பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகை மிக குறைவாக இருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# பொதுப்போக்குவரத்தில் திருடர்கள் மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் நெருக்கடி காரணமாக தற்போது பொதுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்தும் மக்கள் பயணப் பை கொள்ளை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பொது போக்குவரத்து சேவைகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

குறிப்பாக தனியார் பேருந்து சேவைகள், அரச பேருந்துகள் மற்றும் தொடரூந்துகள் என்பவற்றை பயன்படுத்தும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அவற்றில் மக்களின் நெரிசலும் அதிகரித்துள்ளது.

இதன்போது மக்களின் பயணப் பைகள் மற்றும் ஏனைய பெறுமதிமிக்க பொருட்களை கொள்ளையிடுவதற்காக சிலர் பொதுப் போக்குவரத்தில் பயணிக்கின்றனர்.

எனவே, பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துபவர்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# சரியான அடி!

(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது கிழவியின் மகன் அவன் என்ன செய்கிறான் என்று மறைந்திருந்து பார்க்கலானான். கந்தன் கழுதையின் காதுகளைப் பிடித்து உலுக்கி முத்துக்களையும் ரத்தினங்களையும் எடுத்ததைக் கண்டான். கந்தன் உள்ளே போனதும் அந்தக் கழுதையை அவிழ்த்து பத்திரமான இடத்தில் கட்டி விட்டு ஒரு சாதாரண கழுதையை இழுத்து வந்து அந்த இடத்தில் கட்டி விட்டான்.

கந்தன் ஒரு முத்தை கிழவியிடம் கொடுத்து அவள் போட்ட சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு அன்றிரவு தங்கினான். மறுநாள் காலை அவன் கிழவியிடம் விடைபெற்றுக் கொண்டான். தன் கழுதையைக் கட்டி வைத்திருந்த இடத்திற்குப் போய் அங்கு கட்டப்பட்டிருந்த கழுதையை அவிழ்த்து ஓட்டிக் கொண்டு அவன் தன் ஊருக்குப் போனான்.



அவன் தன் தந்தையிடம் தான் சம்பளத்திற்குப் பதிலாகப் பெற்ற கழுதையின் சிறப்பைக் கூறி "இப்போது பார்! இது முத்துக்களாகவும் ரத்தினங்களாகவும் கொட்டப் போகிறது" என்று கூறி அதன் காதுகளைப் பிடித்து உலுக்கினான். கழுதையோ அவனை உதைத்தது. முத்துக்களை உதிர்க்கவில்லை.

அதைக்கண்ட அவனது தந்தை "போடா முட்டாளே! யாரோ உன்னை நன்றாக ஏமாற்றி விட்டார்கள். போ இனிமேல் என் கண்முன் நிற்காதே" என்று கூறி விரட்டி விட்டான். கந்தனுக்குக் கழுதையின் சக்தி எப்படி மறைந்து போய் விட்டது என்பது புரியாத புதிராக இருந்தது. அவன் மறுபடியும் வேலை தேடிக் கொண்டு ஊரை விட்டு கிளம்பினான்.

ஒரு காட்டு வழியே போகும் போது ஒரு கிழவனான தச்சன் மரத்துண்டுகளைச் செதுக்கி கட்டாகக் கட்டி எடுத்துக் கொண்டு செல்வதை அவன் கண்டான்.

(தொடரும்...)

# சிலப்பதிகாரம்

## இந்திர விழா

அந்த இந்திர விழா தன் கணவனை மீட்டுத் தரப்போவதை அறியாமல் துன்பத்தில் இருந்தாள் கண்ணகி.


இந்திர விழா புகார் நகரில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கு பலமான வரலாற்றுப் பின்னணி உண்டு.

புகார் இந்திரனின் நகரம்.

அதனால்தான் அங்கே காமனின் ஆட்சி!

இந்திரன் ஒரு சமயம் அந்நகரை விட்டுப் போக வேண்டியிருந்தது. நகரை யார் பொறுப்பில் விட்டுப் போகலாம் என்று யோசித்தான்.

சோழ மன்னன் முசுகுந்தன் அவனது நம்பிக்கைக்கு உரியவன், வீரன் எனவே முசுகுந்தனிடம் நகரை ஒப்படைத்தான்.




ஒரு வேளை அவனால் சமாளிக்க முடியாத தருணங்கள் வருமானால் என்ன செய்வது? எதற்கும் இருக்கட்டும் என்று காவலுக்கு உதவிப் பூதம் ஒன்றை விட்டுப் போனான் இந்திரன்.

இந்திரனுடைய வெளியேறுதலுக்காகவே காத்திருந்தாற் போல எதிரி நாட்டவர்கள் படையெடுத்தார்கள். புகாரைக் கைப்பற்ற முயன்றார்கள்.

அவர்களது முயற்சி தோற்றுப் போனது மாவீரனான முசுகுந்தன் தன் எதிரிகளைத் தாக்கி புறமுதுகிட்டு ஓடச்செய்தான்.

வீரத்தில் வெல்ல இயலாதவர்கள் வஞ்சத்திலும் தந்திரத்திலும் வெல்வது இயல்புதானே?

அவர்கள் இருள் கணை என்கிற மந்திர ஆயுதத்தை ஏவி புகார் நகரை இருள் கவ்வச் செய்தார்கள். இதனால், வேறு எந்த ஒளியும் எடுபடாமல் போனது. ஊர் மக்கள் எல்லோரும் குருடர்களைப் போல் ஆனார்கள்.

அவ்வளவுதான். புகார் நகரில் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்தது. திருடர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் கொண்டாட்டம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எதிரிகள் மீண்டும் படையெடுத்து வந்தார்கள். இரகசியமாக மெல்ல ஊடுருவ ஆரம்பித்தார்கள். முசுகுந்தன் செய்வதறியாது தவித்தான்.

அப்போது இந்திரன் காவலுக்கு விட்டுச் சென்றிருந்த பூதம் அவன் உதவிக்கு வந்தது. இருள் கணையைச் செயலிழக்கச் செய்தது. புகார் நகருக்கு ஒளி திரும்ப வந்தது. ஊடுருவியிருந்த எதிரிகளைப் பந்தாடியது பூதம்.

இந்திரன் மகிழ்ச்சியடைந்தான். அந்த பூதத்தைக் காவல் தெய்வமாக அங்கேயே இருக்கச் செய்தான்.

அது முதல் அந்த பூதத்துக்கும் இந்திரனுக்கும் ஒவ்வோர் ஆண்டும் அதே நாளில் புகார் மக்கள் நன்றி பாராட்டி விழா எடுக்கத் தொடங்கினார்கள். அதுதான் இந்திர விழா. இந்த விழாவின் போது வீதிகள் எல்லாம் அலங்காரப் பந்தல்கள் கொண்டு ஜொலிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.
> – ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லையெனில் எந்த ஆட்சியாலும் பயனேதுமில்லை

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு முன்வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்பதாக இருந்தால், சர்வகட்சி அரசாங்கமே ஒரே வழியாகும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தாக இருக்கிறது.

இதேவேளை சர்வகட்சி அரசாங்கத்துக்குத் தமது பூரண ஆதரவு இருக்குமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் அறிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்துக்குத் தமது ஆதரவு இருக்குமென கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவசரப்பட்டு அறிவித்தமைக்குள் சர்வகட்சி அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்குச் சாதகமான விடயங்கள் இருக்கிறதென்பதான கருத்துருவாக்கம் ஏற்படுகிறது.

இங்குதான் ஓர் விடயத்தைத் தமிழ் மக்கள் தெளிவுபடுத்துகின்றார்கள்.

அதாவது இலங்கைத் திருநாட்டின் ஆட்சி அதிகாரத்தில் யார் இருந்தாலென்ன? என்ன மாதிரியான ஆட்சி முறைமை கொண்டவரப்பட்டாலென்ன? அவையெல்லாம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தயாராகவில்லையெனில், அந்த ஆட்சி முறைமையால் இந்த நாட்டுக்கு எந்த விமோசனமும் ஏற்படப் போவதில்லை.

உண்மை. இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலை என்பது தமிழ் மக்களுக்கு எதிரான கொடும்போரை பேரினவாத ஆட்சியாளர்கள் நீண்ட நெடுங்காலம் நடத்தியதன் காரணமாக ஏற்பட்டதாகும்.

எனினும் அந்த உண்மையை ஆட்சி அதிகாரத்தில் அமருகின்ற எவரும் ஏற்கத் தயாரில்லை.

என்ன காரணத்தினால் இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதென்பதை ஆராயாமல் – அதற்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டை மீட்டெடுப்பதென்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவதுபோல சர்வகட்சி அரசாங்கத்தால் மட்டுமே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க முடியும் என்பது ஜனாதிபதி பதவிக்கு எதிராகப் புரட்சி ஏற்படுவதைத் தடுப்பதற்கான ஓர் ஏற்பாடேயன்றி வேறில்லை என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

ஆக, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதுதான் ஒரே வழி என்ற கருத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிறுத்துவதற்குள் இருக்கக்கூடிய அவரின் நோக்கம் என்ன? என்று ஆராய்வதுதான் இங்கு முக்கியமானது.

அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைந்து அதனூடாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பது என்ற நோக்கத்தோடு ஜனாதிபதியின் அழைப்பு இருக்குமாயின், அதற்குத் தமிழ்த் தேசியத் தரப்புகள் தமது ஆதரவை வழங்குவது ஏற்புடையது.

மாறாக பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பது என்பதே ஜனாதிபதியின் நோக்காக இருந்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுக்கும் சர்வகட்சி அரசாங்கத்தால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது என்பது நிறுதிட்டமான உண்மை.

இதற்குத் தமிழ்த் தரப்புகள் ஆதரவு வழங்குமாயின் மீண்டுமொரு தடவை தமிழர் அரசியல் தடக்கிவிழுவதைத் தடுக்க முடியாது போகும்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் அத்தியாவசிய ஊழியர்களுக்கு இன்று எரிபொருள் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி தெற்கு கூட்டுறவு சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றையதினம் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலை 7 மணி முதல் 9 மணி வரை விவசாயம் மற்றும் நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களிற்கும்.

காலை 9 மணி முதல் 10 மணி வரை பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பணியாளர்களிற்கும், காலை 10 மணி முதல் 11 மணிவரையில் சுகாதார துறையினருக்கும்.

காலை 11 மணி முதல் 12 மணிவரையில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் ஊடகவியலாளர்களிற்கும், நண்பகல் 12 மணி முதல் 3 மணிவரையில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்களிற்கும்.

பிற்பகல் 3 மணி முதல் 4 மணிவரையில் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியர்களிற்கும், பிற்பகல் 4 மணி முதல் இரவு 7 மணிவரையில் ஏனைய திணைக்களங்களில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள், பணியாளர்களிற்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,7)

## பிரதமர் அலுவலகம் அருகில் நின்ற காரில் தீப்பரவல்

(கொழும்பு)

பிரதமர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள உணவகம்அருகே நேற்று நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

காரை ஸ்டார்ட் செய்ய முற்பட்ட போது, கார் தீப்பற்றி எரிந்ததாகவும் தெரியவருகிறது.

குறித்த காரின் முன்பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் பாதுகாப்புப் படையினரின் தலையீட்டில் கொழும்பு நகர சபையின் இரண்டு தீயணைப்பு வாகனங்களைப் பயன்படுத்தி தீ அணைக்கப்பட்டது. (4,7)

## 'மிஸ்டர் பீன்' போல் செயற்படுகிறார் ரணில் சமிந்த சாடல்

(கொழும்பு)

பிரதமராக பதவியேற்றது முதல் ரணில் விக்கிரமசிங்க வெறும் எதிர்வு கூறல்களையே கூறி வருகின்றார். மக்கள் எதற்காக போராடினார்கள் என்பதை மறந்து மக்கள் பிரச்சினைகளை தீர்க்காமல், "மிஸ்டர் பீன்" போல செயற்பட்டு வருகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்தது மக்கள் பிரச்சினையை தீர்க்க அல்ல ராஜபக்ஷக்களை காப்பாற்றவே, வெளிநாடு செல்வதாக இருந்த பஷில் ராஜபக்ஷ தற்போது வெளிநாடு செல்லவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவும் மீண்டும் நாட்டுக்கு வரப்போவதாக கேள்விப்படுகின்றோம்.

அதற்கு மேலாக பஷில் ராஜபக்ஷ கட்சி சீரமைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

ஆக, நாட்டை அழித்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நிற்கும் ரணில் ராஜபக்ஷவை விரட்டியடிக்க ஒட்டுமொத்த மக்களும் ஒன்றிணைய வேண்டும் என சமிந்த விஜேசிறி மேலும் தெரிவித்துள்ளார். (4,7)

## நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக முறைப்பாடு

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எஸ். எம். நிஷார் மௌலானா என்ற நபரே நேற்று குறித்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

ஜப்பானின் Taisei நிறுவனத்திடம் 200 மில்லியன் ரூபா இலஞ்சம் கோரியதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி முன்னாள் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4,7)

## சாதாரண தேவைக்கு கூட எஞ்சியுள்ள எரிபொருள் போதாது

### உலக உணவுத் திட்டம்

இலங்கையில் எஞ்சியுள்ள பெற்றோல் இருப்பு சாதாரண தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்காது என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

கடுமையான விநியோகப் பற்றாக்குறையை எதிர்கொள்வதால், அடுத்த 12 மாதங்களுக்கு எரிபொருள் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

மீதமுள்ள பெற்றோல் இருப்பு சாதாரண தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்காது என்பது அன்றாட வாழ்க்கையின் கிட்டத்தட்ட எல்லா அம்சங்களையும் பாதித்துள்ளது, மக்கள் வேலைக்குச் செல்லும் திறனைத் தடுக்கிறது மற்றும் பாடசாலைகள், அரசாங்க சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கிறது என்றும் உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது. (4,7)

## காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ரொனால்ட் பெரேரா இலங்கை வங்கியின் தலைவராக நான்கரை வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4,7)

## வவுனியாவில் குழப்பமின்றி எரிவாயு விநியோகம்

வவுனியா ஊடக அமையம் மற்றும் உக்குளாங்குளம் சீர்திருத்தம் விளையாட்டு கழகம் என்பன இணைந்து 1081 லிற்றோ சமையல் எரிவாயுக்களை எந்தவித குழப்பமுமின்றி அமைதியான முறையில் மக்களுக்கு பெற்றுக் கொடுத்திருந்தன.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள சீர்திருத்தம் விளையாட்டுக் கழக மைதானத்தில் வைத்து அவை நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

அதன்படி எந்தவித மேலதிக கட்டணங்களுமின்றி 12.5 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 5,169 ரூபாய்படி 1011 உம், 5 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 2,127 படி 50 உம், 2.3 கிலோ சமையல் எரிவாயு ஒன்று 1,044 படி 20 உம் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியாவின் பல்வேறு கிராமப் பகுதிகளிலும் இருந்து வருகை தந்த மக்கள் அதனை பெற்றுச் சென்றதுடன், மக்கள் நீண்ட நேரக் காத்திருப்பு, நீண்ட வரிசை, நேரவிரயம், அலைச்சல், மேலதிக கட்டணம் என எதுவுமின்றி அதனை இலகுவாக பெற்றுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 40

**உக்ரைனின் சுதந்திரத்திற்குப் பிந்தைய பொருளாதார செயற்திறன்**

அரசு கட்டுமானம் மற்றும் இராஜதந்திரத்தில் அதன் ஒப்பீட்டளவில் வெற்றிகரமான முயற்சிகளுக்கு முற்றிலும் மாறாக குறிப்பிடத்தக்க வகையில் மோசமாக இருந்தது. ரஷ்யாவின் பொருளாதார மற்றும் சமூக விலகல் உக்ரைனிய அரசாங்கத்தின் விரைவான மாற்றத்திற்கான விருப்பத்தை குறைத்தது; கலப்பு பொருளாதாரத்தை அடைவதற்கான படிப்படியான அணுகுமுறையை அது தேர்வு செய்தது. சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு பிறகு உக்ரைனிய தொழில்துறை முன்னாள் சோவியத் குடியரசுகளுடனான வர்த்தகத்தில் பாதிப்பேற்பட்டதால் பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்தது.

உக்ரைன் வெளிநாட்டு எரிசக்தியில் தங்கியிருப்பதால் உக்ரைனின் அதிக சார்பு பொருளாதாரத்தை கஷ்டப்படுத்தியது. குறிப்பாக உக்ரைனின் முக்கிய எரிபொருட்களின் விநியோகிஸ்தரான ரஷ்யா முந்தைய மானிய விலையை உலக அளவில் உயர்த்துவதற்கு நகர்ந்தது.

ஒரு திடமான பணவியல் கொள்கை (solid monetary policy) நிறுவப்படாததால், உக்ரைன் மிகை பணவீக்கத்தை அனுபவித்தது, இது 1993 இல் குறைந்தபட்சம் 4,735 சதவீதத்தை எட்டியது.

இதற்கிடையில், அரசியல் உள்நாட்டினர் அரச சொத்துக்களை தங்களுக்குப் பிடுங்கிக் கொள்வது அல்லது தொழில் மற்றும் விவசாயத்திற்குக் கிடைக்கும் குறைந்த வட்டிக் கடன்களை நியாயமற்ற முறையில் பயன்படுத்திக் கொள்வதால் ஊழல் அதிகரித்தது.

அக்டோபர் 1992 இல் லியோனிட் குச்மா பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டதன் மூலம் பொருளாதார சீர்திருத்தத்திற்கான ஒரு தொடர்ச்சியான முயற்சி வந்தது. இருப்பினும், அவரது முயற்சிகள் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது மற்றும் ஒரு அளவிற்கு, ஜனாதிபதி க்ராவ்சுக்கினால் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. கோபமடைந்த குச்மா 1993 இல் இராஜினாமா செய்தார்.

**உக்ரைனின் பிரதம மந்திரிகள்**

உக்ரைனின் பிரதம மந்திரி சுதந்திர உக்ரைன் அரசாங்கத்தின் தலைவர். உக்ரைனிய அரசாங்கத்தின் நிர்வாகக் கிளையின் மிக உயர்ந்த அமைப்பான

**உக்ரைனின் அமைச்சர்கள் அமைச்சரவைக்கு பிரதமர் தலைமை தாங்குகிறார். இந்த நிலை மார்ச் 25, 1946 இல் நிறுவப்பட்ட சோவியத் உக்ரைனிய மந்திரிகள் சபையின் தவிசாளர் பதவிக்கு பதிலாக உருவாக்கப்பட்டது.**

பிரதம மந்திரி பாராளுமன்றத்தின் (Verkhovna Rada) ஒப்புதலுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகிறார். பாராளுமன்றத்தின் உறுப்பினர்களில் ஒரு எளிய பெரும்பான்மையானது ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிக்கும்போது ஒப்புதல் வழங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இதுவரை தெரிவு செய்யப்பட்ட பிரதமர்களில் பாராளுமன்றத்தில் ஆகக் கூடுதலான வாக்குகளைப் (373) ஜெற்று பெப்ரவரி 4, 2005 அன்று நியமிக்கப்பட்ட பிரதமர் யூலியா திமோஷென்கோ (Yulia Tymoshenko) ஆவார். 300 வாக்குகளுக்கு மேல் பெற்ற மற்றைய பிரதமர்கள் ஆர்செனி யட்சென்யுக் (Arseniy Yatsenyuk) (371), யட்சென்யுக் மீண்டும் 2014 இல் (341 வாக்குகள்), விட்டோல்ட் ஃபோகின் (Vitold Fokin) (332 வாக்குகள்), மற்றும் லியோனிட் குச்மா (Leonid Kuchma) (316 வாக்குகள்). என்போர் ஆவர். யூலியா திமோஷென்கோ (Yulia Tymoshenko) உக்ரைன் வரலாற்றில் பிரதமராக நியமிக்கப்பட்ட முதல் பெண் பிரதம மந்திரி ஆவார்.

**1991 இல் சோவியத் யூனியனிலிருந்து உக்ரைனிய சுதந்திரம் பெற்றதில் இருந்து, பதினாறு பிரதம மந்திரிகள் இதுவரை பதவி வகித்துள்ளனர். பதவி நிலை (Acting) பிரதமர்களையும் கணக்கில் எடுத்தால் இது 20 ஆகும். இதில் இருவர் ரஷ்யாவில் பிறந்தவர்கள்.**

மற்ற அமைச்சரவை உறுப்பினர்களைப் போலவே பிரதம மந்திரியும் தானாக முன்வந்து இராஜினாமா செய்யலாம். 2004 அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு முன்னர், பிரதமர் பொதுவாக ஜனாதிபதியால் ஒரு தலைப்பட்சமாக பதவி நீக்கம் செய்யப்படலாம். 2004 அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்குப் பிறகு, பாராளுமன்ற வாக்கெடுப்பு மூலம் மட்டுமே பிரதமரை பதவி நீக்கம் செய்ய முடியும்.

**பாராளுமன்றத் தேர்தல் (Verkhovna Rada) 1994**

உக்ரைனின் சுதந்திரத்திற்குப் (1991) பின் வெகுஜன எதிர்ப்புகள் மற்றும் குறிப்பாக மாணவர்கள் மற்றும் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களால் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. இதனால் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடந்தன. அவர்களுக்கிடையில் 24 செப்டெம்பர் 1993 இல் சமரசம் எட்டப்பட்டது.

(தொடரும்)

# அமெரிக்காவில் கனமழை 16 பேர் பலி

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கெண்டகி மாகாணத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து மக்களின் இயல்பு வாழ்க்கையை மேலும் பாதித்துள்ளது. கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்தது. இந்நிலையில், கெண்டகி மாகாணத்தில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 16 பேர் பலியாகினர்.

தொடர் கனமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட குடியிருப்பு பகுதிகள் மற்றும் சாலைகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. மின்தடையால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. வெள்ளத்தின் அளவு அதிகரித்து வருவதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அம்மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (4)

# ஈராக் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து போராட்டம் நடத்திய மக்கள்

(பாக்தாத்)




ஈராக்கில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் நடந்த தேர்தலில் அல்-சதருடைய கட்சி 73 இடங்களைக் கைப்பற்றி அதிக வாக்குகள் பெற்ற கட்சியாக திகழ்ந்தது. எனினும் ஆட்சிப் பொறுப்பு ஏற்பது பற்றி கட்சிகளுக்கு இடையே இருந்த சிக்கல்கள் காரணமாக இழுபறி நீடித்தது. இதற்கிடையே, முகமது அல்-சூடானி புதிய பிரதமராக அறிவிக்கப்பட்டார். இதனை எதிர்த்து அல்-சதருடைய ஆதரவாளர்கள் போராட்டத்தில் இறங்கி உள்ளனர். ஏனெனில் பிரதமர் வேட்பாளராக உள்ள முகமது ஈரானுக்கு மிகவும் நெருக்கமாக செயற்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இந்நிலையில், ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இந்த வாரத்தில் தொடர்ந்து 2 ஆவது முறையாக நூற்றுக்கணக்கானோர் மீண்டும் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து போராட்டம் நடத்தினர். பாராளுமன்ற வளாகத்தை முற்றுகையிட்டு ஷியா தலைவர் முக்தாதா அல்-சதர் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, பிரதமர் முஸ்தபா, போராட்டத்தை உடனே கைவிடும்படி கேட்டுக்கொண்டார். (4)

# வரலாறு காணாத வெப்ப அலைக்கு காரணம் மனிதர்களே

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

**பிரித்தானியாவில் கடந்த மாதம் பதிவான வரலாறு காணாத வெப்ப அலைக்கு மனிதர்கள் உருவாக்கிய பருவநிலை மாற்றமே காரணம் என ஆய்வறிக்கையொன்று தெரிவிக்கின்றது.**



இதேபோன்ற பருவ நிலையில், தொழில் புரட்சிக்கு முந்தைய 19ஆம் நூற்றாண்டு காலத்தில் வெப்பநிலை எவ்வாறு இருக்கும் என்பதையும் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள வெப்பநிலையையும் ஒப்பிட்டு சர்வதேச நிபுணர் குழுவொன்று ஆய்வு செய்தது.

அதில், பசுமை வாயுக்களை காற்றில் கலப்பதன் மூலம் மனிதர்களால் உருவாக்கப்படும் புவி வெப்பமாதல் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் பருவநிலை மாற்றத்தால்தான் பிரித்தானியாவில் இந்த மாதம் வரலாறு காணாத வெப்ப அலை ஏற்பட்டது என்று அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பிரித்தானியாவில் பதிவான வெப்பம் 104.5 டிகிரி ஃபாரன் ஹீட் அளவுக்கு அதிகமான வெப்பத்தை கொண்டு வந்தது.

சுட்டெரிக்கும் கோடையில் பழக்கமில்லாத ஒரு நாட்டில், இந்த வெப்ப அலை மனிதர்களை நிலைக்குலைய வைத்தது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய டெங்கு...

யின் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஜி.விஜேசூரிய பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும் கொசுக்கள் பெருகக்கூடிய இடங்கள் இல்லாமல் இருப்பதையும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இக்காலத்தில் பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை பரவிவரும் வைரஸ் காய்ச்சலானது தொண்டைப்புண், காய்ச்சல், இருமல் மற்றும் சளி போன்ற அறிகுறிகளாகும் எனவும் தெரிவித்தார்.

காய்ச்சல் குறைந்த பின்னரும் அறிகுறிகள் தொடரலாம், அறிகுறிகள் தென்பட்டவுடன் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுமாறும் தெரிவித்தார். (4-7)

## 22ஆவது...

பின் 22 ஆவது திருத்தம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்போது வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள 22ஆவது திருத்த சட்டமூலத்தை விட மேலும் சில திருத்தங்களை உள்ளடக்கி புதிய வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் நீக்கும் அதிகாரத்தை ஜனாதிபதியிடம் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் சேர்க்கப்பட்ட இடைக்கால விதிகள், புதிய திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் தெரிவித்தார். (4-7)

## பாடசாலை...

போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (4-7)

## இளம் குடும்பஸ்...

சுடப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை அந்தப் பகுதிக்கு சென்ற ஆயுதம் தாங்கிய குழு ஒன்று அவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது கட்டுத்துவக்கினால் அவர் மீது சுடப்பட்டுள்ளதாகவும் அதன்பின் வாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த இளம் குடும்பஸ்தரது உடலில் பலத்த வெட்டுக் காயங்கள் காணப்படுவதுடன், ஒரு கை முற்றாக துண்டிக்கப்பட்டு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உடல் முழுவதும் வெட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று காணப்படுவதாக சிதம்பரபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த ரஞ்சா என அழைக்கப்பட்ட யோன்சன் என்ற 30 வயதுடைய இளம் குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-7,250)

## எதிர்வரும்...

மேல், சப்ரகமுவ, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

குறித்த பிரதேசங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் பலத்த மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் தென் மாகாணத்திலும் காற்று இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

## போசனை...

உணவுகளை உட்கொள்வதில்லை.

இதனையடுத்து, 3.4 மில்லியன் மக்களுக்கு, அவசர உணவு, ஊட்டச் சத்துக்களை வழங்க உலக உணவுத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

ஜூன் மாதத்தில், உலக உணவுத் திட்டத்தின், சந்தை கண்காணிப்பு நேர் காணல்களின் [illegible] கள் மற்றும் [illegible] விலை சுமையாக இருப்பதால், மக்கள் சிறிய அளவில் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர்.

இலங்கையின் உணவு இறக்குமதிகள் முன்னர் மாதத்திற்கு 130 மில்லியன் டொலர்களில் இருந்து, தற்போது 50 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் குறைந்துள்ளன. காய்கறிகள் போன்ற சத்தான உணவுகள், நெருக்கடிக்கு முந்தைய விலையை விட இரண்டு முதல் ஐந்து மடங்கு வரை அதிகரித்துள்ளன என்றும் குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது. (4-7)

## சீன கப்பலின்...

முகத்தை சென்றடையும் என அறிய முடிகின்றது.

எனினும் சீன கப்பலின் அம்பாந்தோட்டை விஜயத்திற்கான சரியான நோக்கம் தெரியவரவில்லை.

இந்தக் கப்பல் எதற்காக செல்கின்றது என்பது தெரியவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான கப்பல்கள் சீனாவோ அல்லது வேறு நாடோ ஏவுகணை பரிசோதனையை மேற்கொள்ளும்வேளையே புறப்படத் தொடங்கும் எனத் தெரிவித்துள்ள பாதுகாப்புத் தரப்பினர் இது போர்க்கப்பல் இல்லை. இவ்வாறான கப்பல்கள் முன்னரும் இந்தப் பகுதியில் நடமாடியுள் என. நாங்கள் கண்காணித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளனர்.

யுவான் வாங்-5 என்ற சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல் விண்வெளி மற்றும் செய்மதி கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளது.

குறிப்பிட்ட கப்பல் வரவுள்ளதை முதலில் மறுத்த இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு பின்னர் 11 முதல் 17ஆம் திகதிக்குள் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்பதை உறுதி செய்துள்ளன. (4-7)

## விபரீத...

மல்லாகம் தெற்கைச் சேர்ந்த 68 வயதான அண்ணாமலை நற்குணம் என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அண்மையில் அவரது மகன் காணாமல்போன நிலையில் அதனால் ஏற்பட்ட மன உளைச்சலாலேயே அவர் இவ்வாறு விபரீத முடிவெடுத்ததாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## சீனா தலையிட்...

நாட்டில் புதிய சர்ச்சையை தோற்றுவித்திருக்கும் விமானங்களை கண்காணிக்கும் சீன கப்பல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த டுவிட்டர் பதிவில்,

"சீனக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவிருப்பது பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது. மற்றைய நாடுகளின் அதிகாரப் போட்டிகளில் நாம் பக்கம் சார்ந்து நடந்துகொள்வதில்லை.

ஆனால் இந்து சமுத்திரத்தில் சீனாவின் இராணுவ பிரசன்னம் இந்தியா நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளை வெளிப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்று நாம் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். சீன இராணுவ பிரசன்னத்துக்கு இடமளித்து நிலைவரத்தை இலங்கை பாரதூரமானதாக்கக்கூடாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

## ஒய்வுபெறும்...

திட்டம் கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 113 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 113 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 665,739ஆக அதிகரித்துள்ளது. (4-7)

# தாக்குதல் சந்தேகநபர்கள் இன்னமும் அரசியலில்

## பேராயர் கர்தினால்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகநபர்கள் இன்னமும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர் பொலிஸ் உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் நாட்டின் செல்வாக்கு மிக்கநபர்கள் காணப்படுவதால் அது குறித்த உண்மைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

2019 இல் மூன்று தேவாலயங்களிலும் ஹோட்டல்களிலும் குண்டைவெடிக்கவைத்தவர்கள் இன்னமும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர் பொலிஸ் உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர் இதன் காரணமாக நீதிக்கான எங்கள் அழுகுரல்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன,நீதி கிடைக்கவேண்டும் என கத்தோலிக்கர்களாகிய நாங்கள் தொடர்ந்தும் பிரார்த்தனை செய்யவேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-7)

# தந்தை தாக்கியதில் மகன் உயிரிழப்பு

(பலாங்கொடை)

பலாங்கொடை ஓபநாயக்க - பாடியாவத்தை பகுதியில் தனது தந்தையினால் தாக்கப்பட்ட மகன் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 31 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அதிகாலை தந்தை மற்றும் மகன் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதை அடுத்து இந்த சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் 57 வயதான தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். (4-7)

# கொழும்பு கப்பல்துறை - நோர்வே நிறுவனத்திற்கிடையிலான ஒப்பந்தங்கள் ரத்து

(கொழும்பு)

கொழும்பு கப்பல்துறை மற்றும் நோர்வேயின் (Edda Wind) நிறுவனத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கப்பல் கட்டும் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற பொருளாதார மற்றும் நிதி நிலைமை காரணமாகவே இந்த தீர்மானத்தை எடுக்க நேரிட்டதாக கொழும்பு கப்பல்துறை அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

நாட்டில் வெளிநாட்டு நாணய பணப்புழக்கத்தின் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை காரணமாக, தேவையான உத்தரவாதங்களை தொடர்ந்து வழங்குவது மற்றும் கொள்வனவாளர்களிடம் இருந்து கொடுப்பனவுகளைப் பெறுவது சாத்தியமில்லை என்று கொழும்பு கப்பல்துறை தெரிவித்துள்ளது.

இத்தகைய சூழலில், இந்த இரண்டு திட்டங்களையும் தொடர்வது குறிப்பிடத்தக்க அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை விளைவித்திருக்கலாம்.

எனவேதான் திட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன என்று கொழும்பு கப்பல்துறை குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் Edda Wind உடனான ஒப்பந்தங் களை ரத்து செய்வதற்கான விதி முறைகள் மற்றும் நிபந்தனைகள் கட்சிகளிடையே இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. (4-7)

# நுணாவில் ஐ.ஓ.சியில் இன்று, நாளை எரிபொருள் விநியோக விபரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆசிரியர்களுக்கும், யாழ். மாவட்டத்தை சேர்ந்த சட்டத்தரணிகள் மற்றும் தவில், நாதஸ்வர கலைஞர்களுக்கும் QR கோட் நடைமுறையின் கீழ் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளதாக நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் வை. சிவராசா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இன்று திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜே/288 முதல் ஜே/320 வரையுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் ஆசிரியர்களுக்கும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளுக்கும் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை 2ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஜே/321 தொடக்கம் ஜே/ 347 வரையுள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் ஆசிரியர்களுக்கும், வட மாகாணத்திலுள்ள தவில் - நாதஸ்வரக் கலைஞர்களுக்கும் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை எரிபொருள் விநியோகம் இடம்பெறும்.

எரிபொருளைப் பெற்றுக் கொள்ளவரும் அனைவரும் தாங்கள் வசிக்கும் கிராம அலுவலர் பிரிவை உறுதிப்படுத்தும் முகமாக குடும்ப அட்டை அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஏதாவது ஓர் ஆவணத்தையும், தொழிலை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4-7,30)

# மாணவர்களுக்கான மதிய நேர உணவை மீண்டும் வழங்க ஆராய்வு

## கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான மதிய நேர உணவை மீண்டும் வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்று மற்றும் இரண்டுக்கான ஆரம்பக் கல்வியை இழந்து மூன்றாம் ஆண்டுக்கு சென்றுள்ள பாடசாலை மாணவர்களின் தகைமை குறித்து பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

இன்று முதல் 5ஆம் திகதி வரையான 5 நாட்களில் 3 நாட்களுக்கு மாத்திரம் பாடசாலை கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என தெரிவித்துள்ளார். (4-7)

# களனி பல்கலைக்கழக மாணவர் வெள்ளை வானில் கடத்தி விடுவிப்பு

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழகத்தின் மாணவர் செயற்பாட்டாளர் ஒருவர் வெள்ளைவானில் கடத்தப்பட்டு சுமார் 3 மணித்தியாலங்களின் பின்னர் நெடுஞ்சாலையில் விட்டுச் செல்லப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக பொது மாணவர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் 4ஆம் ஆண்டு கல்வி கற்கும் மாணவர் ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து இந்த மாணவர் கடத்தப்பட்டதாகவும், சுமார் 3 மணித்தியாலங்கள் விசாரணைக்கு பின்னர் வீதியில் விடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் ஏனைய மாணவர் செயற்பாட்டாளர்கள் தொடர்பிலும் தன்னிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தை கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். (4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12291)

076 825 7716 (ஆகாஸ்)

சிறுநீரகம் தேவை

56 வயதான பெண் ஒருவரிற்கு A அல்லது O வகையான சிறுநீரகம் மிக அவசரமாக தேவைப்படுகின்றது. தானமாக வழங்க விரும்புபவர்கள் பின்வரும் இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

தொடர்பு

077 530 4170, 074 192 8056
011 239 9969

(12310)

காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/-) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 [illegible]

(12311)

வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் (பில் கிளாக்) உடன் தேவை.

076 659 5578

(12309)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.